16.12.2024

அ.வ.எண். 529-2017

வாசா.4 - வேலுச்சாமி

<u>16, 17ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் DIPLOMA (IN) MECHANICAL ENGINEERING படித்துள்ளேன். இந்த ஆவணம் எழுதுவது சம்மந்தமாக நான் ஒருமுறை தான் சார்பதிவாளர் அலுவலகம் சென்றேன். வா.சா.ஆ.5 ஆவணத்தின் அசலை நான் பார்த்துள்ளேன். பொது அதிகார பத்திரம் எழுதி பதிவு செய்யப்பட்டால் தான் சட்டப்படி செல்லும் என்பது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 எழுதியதாக சொல்லும் தேதி 27.10.1999 ஆகும். அது பதிவு செய்யப்பட்ட தேதி 03.11.1999 ஆகும். 03.11.1999 அன்றைய தேதி முதல் தான் அவர் பொது அதிகார முகவராக ஆவார் என்றால் அது தெரியவில்லை. நான் 27.10.1999 அன்று தான் நான் வா.சா.ஆ.5 ஆவணத்தில் கையொப்பம் செய்தேன். அதற்கு பின்னிட்டு நான் கையொப்பம் செய்யவில்லையா என்றால் செய்தேன். திருநாவுக்கரசு என்பவர் யார் என்றால் எனக்கு தெரியாது, அவர் பழனிச்சாமிக்கு தான் பழக்கம், நான் பழனிச்சாமி சொல்லி தான் கையொப்பம் செய்ய சென்றேன். மற்றொரு சாட்சி பாலகிருஷ்ணன் அவரும் பழனிச்சாமி தான் அழைத்து வந்தார். பழனிச்சாமி எனது நண்பர், அதன் பின்பு எனது அக்காவின் கணவர்.

ஆறுமுகம் என்பவரை பழனிச்சாமிக்கு முன்னதாகவே தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பொது அதிகார பத்திரம் 03.11.1999 ல் பதிவு செய்யப்பட்ட பின்னிட்டு தான் நடைமுறைக்கு வரக்கூடிய ஆவணம் என்றால் சரியல்ல. பதிவு செய்யாத 27.10.1999 தேதிய பொது அதிகார பத்திரத்தின் கீழ் திருநாவுக்கரசு பொது அதிகார முகவர் என்ற அடிப்படையல் பழனிச்சாமிக்கு கிரயம் கொடுக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் வா.சா.ஆ.6 ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். மேற்படி வா.சா.ஆ.6 ஆவணத்தை 03.11.1999 ல் பதிவு செய்யப்பட்டது. 27.10.1999 மற்றும் 03.11.1999 தேதிகளில் தான் நான் சார்

பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேன். வா.சா.ஆ.6 03.11.1999 ல் பதிவு செய்யப்படவில்லை என்றும் 04.11.1999 ல் தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஆறுமுகம், திருநாவுக்கரசிற்கு பொது அதிகாரம் கொடுத்து அதன் பின்னிட்டு பழனிச்சாமி திருநாவுக்கரசரிடம் இருந்து கிரயம் பெற்றதற்கு பதிலாக அதே தேதியில் ஆறுமுகத்திடம் இருந்து நேரடியாகவே பழனிச்சாமி கிரயம் பெற்றிருக்கலாம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 மற்றும் 6 ஆவணங்களை தயார் செய்த பத்திர எழுத்தர் பெயர் இளங்கோ. சொத்தை அபகரிக்கவே ஒரே நாளில் பழனிச்சாமியால் வா.சா.ஆ.5 மற்றும் 6 ஆவணங்கள் போலியாக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தற்போது உள்ள வா.சா.ஆ.5 மற்றும் 6 ஆவணத்தில் என்னுடைய கையெழுத்துக்கள் இல்லை, அது அசல் ஆவணத்தில் தான் உள்ளது. அசல் ஆவணம் பழனிச்சாமி வீட்டில் தான் உள்ளது.

சொத்தை அபகரிக்க நானும், பழனிச்சாமியும் மோசடியாக ஆவணங்கள் உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அசல் ஆவணங்களை தாக்கல் செய்தால் தான் என்னுடைய சாட்சி கையெழுத்துக்கள் பற்றிய விவரங்கள் தெரிய வரும் என்றும் நகல் ஆவணத்தை வைத்து சொல்லும் சாட்சியம் ஏற்றுகொள்ள கூடாது என்றால் சரியல்ல. அது போலியான உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்பதால் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் தவிர்த்துவிட்டனர் என்றால் சரியல்ல. மேற்படி அசல் ஆவணங்களை பார்ககாமல் நான் எனது அக்கா கணவருக்காக அவரது வாரிசுகளுக்காக சாட்சியம் அளிப்பது ஏற்றுகொள்ளகூடாது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் மேற்படி வா.சா.ஆ-5 மற்றும் 6 ஆவணங்கள் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. அதிகாரமே இல்லாமல் 27.10.1999 ல் எழுதப்பட்ட கிரய பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/வேலுச்சாமி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur